# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.46 (L.W.76)

| | | | |
|---|---|---|---|
| Name | Saravanan | Caste | |
| Father's Name | G.Nijanandan | Calling | |
| Village | Kattukandalur | Religion | Hindu |
| Taluk | Arni | Age | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.02.2025.

(A1 to A6 present)

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.25 P.M.**

நான் தற்போது வேலூர் மாவட்டம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணி புரிகிறேன். ஆஜர் எதிரிகள் 1 முதல் 6 அனைவரையும் தெரியும். அவர்கள் காவல் துறையை சேர்ந்தவர்கள்.

இதற்கு முன்பு நான் ஆம்பூர் நகர காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்தபோது 27.06.2015 அன்று இரவு சுமார் 09.00 மணியளவில் ஆம்பூரை சேர்ந்த கலீல் பாஷா என்பவர் ஒரு புகார் மனு கொடுத்தார். 26.06.2015 அன்று அலி அக்பர் என்பர் ஒரு புகார் மனு கொடுத்தார். ஷகீல் அகமது இறந்தது சம்பந்தமாக புகார் மனு கொடுத்தார்.

இது தொடர்பாக பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 158/2015 சட்டப்பிரிவு 176 கு.வி.மு.ச.வின் கீழ் ஏற்கனவே பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருந்தது.

மேற்படி புகார்களை சம்பந்தப்பட்ட பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு தபால் மூலமாக அனுப்பினேன். இது தொடர்பாக சிபிசிஐடி காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் 07.06.2016 அன்று என்னை விசாரித்தார்கள்.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

கேள்வி: நான் 14.06.2014 முதல் 25.01.2016 வரை நான் ஆம்பூர் நகர காவல் நிலைய ஆய்வாளராக இருந்தேன் என்றால் ?

பதில்: சரிதான்.

கே: 25.06.2015 முதல் 30.06.2015 வரை நான் மேற்படி ஆம்பூர் நகர காவல் நிலையத்தில் ஆய்வாளராக இருந்தேனா என்றால் ?

ப: இருந்தேன்.

கே: ஆம்பூர் அரசு மருத்துவமனை என்னுடைய அதிகார வரம்புக்கு உட்பட்டது என்றால் ?

ப: சரிதான்.

கே: ஆம்பூர் அரசு மருத்துவமனையில் ஒரு தகராறு குறித்தோ அல்லது அடிதடி குறித்தோ ஒரு ஏஆர் போட்டால் எங்கள் நிலையத்திற்கு தகவல் வருமா என்றால் ?

ப: வரும்.

கே: ஆம்பூர் அரசு மருத்துவமனையில் எங்களுடைய காவல் நிலையத்திலிருந்து யாராவது ஒருவராவது பணியில் இருப்பார்களா என்றால் ?

ப: இல்லை.

கே: ஆம்பூர் அரசு மருத்துவமனையில் ஒரு விபத்து பதிவேடு பதிந்தால் அந்த தகவலை எங்களுக்கு யார் தெரிவிப்பார்கள் என்றால் ?

ப: மருத்துவமனையில் இருந்து கம்பவுண்டர் அல்லது அட்டெண்டர் அந்த தகவலை எங்களுக்கு தருவார்.

கே: மருத்துவமனையிலிருந்து வரும் தகவல்களை பதிவதற்கான இன்டிமேஷன் ரிசீவ் ரெஜிஸ்டரில் பதிய வேண்டும் என்றால் ?

ப: சரிதான்.

கே: 19.06.2015 அன்று ஆம்பூர் அரசு மருத்துவமனையிலிருந்து ஒருவர் அடிப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மருத்துவம் பார்ப்பதாக எங்களுக்கு ஏதேனும் இன்டிமேஷன் வந்ததா என்றால்?

ப: வந்தது.

கே: 19.06.2015 மாலை 04.30 மணிக்கு ஆம்பூர் அரசு மருத்துவமனையில் ஒருவர் வந்து அட்மிட் ஆகியிருக்கிறார் என்று விபத்து பதிவேடு பதிந்த இன்டிமேஷனை நாங்கள் பெற்ற பின்னர் அதன் மேல் என்ன நடவடிக்கை எடுத்தோம் என்றால் ?

ப: அடிப்பட்டவரிடம் நாங்கள் பொதுவாக வாக்குமூலம் பதிவதில்லை. எந்த இடத்தில் பிரச்சனை ஏற்பட்டதோ அந்த பாயிண்ட ஆப் ஜூரிடிக்சன் காவல் நிலையத்திற்கு

தொலைப்பேசி மூலம் அடிப்படவர் ஆம்புர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக தெரிவிப்போம்.

கே: ஆம்பூர் அரசு மருத்துவமனையில் ஷமீல் பாஷா என்பவர் அட்மிட் ஆகியதாக எங்களுக்கு விபத்து பதிவேடு இன்டிமேஷன் வந்த பிறகு யாரை அனுப்பி அது எந்த காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இடத்தில் நடந்தது என்ற தகவலை பெற்றேன் என்றால் ?

ப: ஞாபகமில்லை.

கே: ஆம்பூர் அரசு மருத்துவமனையிலிருந்து 19.06.2015 மாலை 04.30 மணிக்கு மேல் ஷமீல் பாஷா என்பவரை அணுகி ஏதாவது வாக்குமூலம் எங்கள் தரப்பில் பதிவு செய்தோமா என்றால் ?

ப: இல்லை.

கே: வாக்குமூலம் வாங்காமல் எந்த ஜுரிடிக்சனில் அந்த குற்ற நிகழ்வு நடந்தது என்பதை எதை வைத்து முடிவு செய்தீர்கள் என்றால் ?

ப: இன்டிமேஷன் மூலம் தெரிந்துக்கொண்டோம்.

கே: அதற்கான ஆவணங்கள் எதையேனும் நீதிமன்றத்தில் கொடுத்துள்ளோமா என்றால் ?

ப: கொடுக்கவில்லை.

கே: ஆம்பூர் அரசு மருத்துவமனையில் 19.06.2015 ஷமீல் பாஷாவை சந்தித்து முழு தகவலையும் நாங்கள் பெற்றுக்கொண்டு அது குறித்து எந்தவொரு ஆவணமும் பதிவு செய்யாமல் வேண்டுமென்றே உண்மைகளை மறைத்து செயல்பட்டிருக்கிறேன் என்றால் ?

ப: சரியல்ல.

கே: 19.06.2015 அன்று இரவு ஆம்பூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்த ஷமீல் பாஷா தப்பித்து போனது குறித்து தகவல் கிடைத்ததா என்றால் ?

ப: இல்லை.

கே: அப்படியானால் ஷமீல் பாஷா உள்நோயாளி சிகிச்சைப்பிரிவில் இருந்து தப்பித்து போனது குறித்து எங்கள் நிலையத்திற்கு தகவல் கொடுத்தார்கள் அதை மறைத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ?

ப: சரியல்ல.

கே: மருத்துவமனையிலிருந்து ஒரு உள்நோயாளி Medico Legal Case–ல் தொடர்புடையவர் தப்பித்துவிட்டார் என்று ஒரு தகவல் எங்கள் நிலையத்திற்கு வரும்போது அது குறித்து செய்ய வேண்டிய சட்டப்படியான நடவடிக்கை என்ன என்றால் ?

ப: பொது நாட்குறிப்பில் குறிப்போம். அவருடைய முகவரியை வைத்து அவரை தேடி கண்டுபிடிக்க முயற்சிப்போம். அவர் கிடைக்கும் பட்சத்தில் அவரிடம் வாக்குமூலம் வாங்கி அதன் அடிப்படையில் நாங்கள் மேல் நடவடிக்கை எடுப்போம்.

கே: மருத்துவமனையிலிருந்து ஒரு உள்நோயாளி Medico Legal Case ல் தொடர்புடையவர் தப்பித்துவிட்டார் என்றால் அதை குறித்து நான் முதல் தகவல் அறிக்கை பதிய வேண்டும் என்றால் ?

ப: சரியல்ல.

கே: பொது நாட்குறிப்பேடு பதிய வேண்டும் என்று நான் சொன்ன நிலையில் மேற்படி நிகழ்வுக்கு பொது நாட்குறிப்பேடு பதிந்தோமா என்றால் ?

ப: இல்லை.

கே: 19.06.2015 இரவு உள்நோயாளி சிகிச்சைப் பிரிவிலிருந்து தப்பித்துப்போன ஷமீல் பாஷா அந்த குறிப்பிட்ட சிகிச்சைப்பிரிவில் இல்லை என்ற தகவல் எனக்கு 20.06.2015 கிடைத்திருக்கிறது. அதை மறைத்து இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் (அரசு வழக்கு பட்டியல் ஆவண எண்.57 இன்டிமேஷன் ரிஜிஸ்டர் பதிவை பார்த்து சொல்லுங்கள்)?

ப: சரிதான்.

கே: ஆம்பூர் நகர காவல் நிலைய இன்டிமேஷன் ரிஜிஸ்டரில் Absconding 20.06.2015 என்றும் 20.06.2015 அன்று 11.30 க்கு தகவல் கிடைத்தது என்றும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் ?

ப: சரிதான்.

கே: Absconding குறித்து எஸ்எஸ்ஐ செல்வம் ஒரு முதல் தகவல் அறிக்கை பதிந்திருக்க வேண்டும் என்றால் ?

ப: அவரைத்தான் கேட்க வேண்டும்.

கே: அது குறித்து முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டதா என்றால்?

ப: இல்லை.

கே: Absconding ஆனவர் மீண்டும் எப்போது கிடைத்தார் என்ற குறிப்பு இருக்கிறதா ?

ப: இல்லை.

கே: அதில் 19.06.2015 என்று எழுதப்பட்டது பின்னர் 20.06.2015 என்று திருத்தப்பட்டுள்ளது என்றால் ?

ப: சரிதான்.

கே: எங்களுடைய ஆவணத்தின் அடிப்படையில் 20.06.2015– லிருந்து ஷமீல் பாஷா எங்கு இருந்தார் என்று எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் ?

ப: சரிதான்.

மேற்படி சாட்சி அந்த பதிவுக்கான தகவலை பார்த்து ஒத்துக்கொள்வதால் அந்த பதிவின் நகல் எ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அந்த பதிவு அரசு தரப்பு பட்டியல் ஆவணம் 57 ல் நான்காவது தாளில் உள்ளது).

கே: தங்களின் முதல் விசாரணையில் பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 158/2015 பிரிவு 176 கு.வி.மு.ச வழக்கு தொடர்பாக இருந்ததால் தாங்கள் 26.06.2015 மற்றும் 27.06.2015 ஆகிய தேதிகளில் பெற்றதாக சொல்லப்படும் புகார்களை பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு தபால் மூலம் அனுப்பி வைத்ததாக கூறியிருக்கிறீர்கள். அந்த தபாலின் நகலை சிபிசிஐடி போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் ?

ப: இல்லை.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 158/2015 என்ற முதல் தகவல் அறிக்கை எந்த தேதியில் போட்டிருக்கிறார்கள் என்றால்?

ப: 27.06.2015 அன்று காலை 00.15 மணிக்கு பதியப்பட்டுள்ளது.

கே: அலி அக்பர் 26.06.2015 தேதியிட்டதாக புகார் என்னிடம் கொடுத்துள்ளார் என்றால்?

ப: சரிதான்.

கே: அந்த புகார் உயர்திரு காவல் ஆய்வாளர் ஆம்பூர் காவல் நிலையம் என்று உள்ளது என்றால்?

ப: சரிதான்.

கே: அந்த புகாரில் எங்கள் காவல் நிலைய முத்திரை எதுவும் உள்ளதா என்றால்?

ப: இல்லை. மேற்படி அலி அக்பர் கொடுத்த புகாரை பார்த்து சாட்சி ஒத்துக்கொள்வதால் அது எ.த.சா.ஆ.5 ஆக அந்த புகார் குறியிடப்படுகிறது.

கே: மேற்படி புகாரை எத்தனை மணிக்கு பெற்றதாக குறிப்பி உள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: ஒருவர் முகவரியிட்டு புகாரை கொடுத்தால் அந்த புகாரின் மேல் முதல் தகவல் அறிக்கை பதிய வேண்டுமா என்றால்?

ப: ஏற்கனவே பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் அது தொடர்பாக வழக்கு பதிவு செய்துள்ளதால் ஒரே புகாருக்கு பல வழக்கு பதிய வேண்டாம் என்று அந்த புகாரை பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்தேன்.

கே: 26.06.2015 என்று நாங்களே தேதியிட்டுள்ள புகாரை பெற்ற நாங்கள் எத்தனை மணிக்கு பெற்றதாக குறிப்பிடாத நிலையில் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் குற்ற எண் 158/2015 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டதாக தங்களுக்கு எழுத்து மூலமான தகவல் ஏதேனும் உண்டா என்றால்?

ப: இல்லை.

கே: 26.06.2015 தேதியிட்டதாக பெற்ற புகார்தான் முதல் புகார் என்றும் அதை மறைத்து இந்த புகாரக்கு பின்னிட்டு வாங்கப்பட்டதாக சொல்லப்படும் புகாரின் மீது முதல் தகவல் அறிக்கை பதிந்ததால் நான் முதல் தகவல் அறிக்கை பதியவில்லை என்று நீதிமன்றத்தில் பொய் சொல்கிறேன் என்றால்?

ப: சரியல்ல.

கே: எங்கள் காவல் நிலையத்திற்கு வந்த புகாரை எந்த சட்டத்தின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதியாமல் மற்றொரு காவல் நிலையத்திற்கு அனுப்பலாம் என்றால்?

ப: புகார்தாரர் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் புகார் கொடுத்துக்கொள்கிறேன் என்று சொன்னார். எனவே அந்த புகார் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு என்னால் அனுப்பிவைக்கப்பட்டது.

கே: மேற்கண்ட பதிலின் அடிப்படையில் பார்த்தால் என்னிடம் கொடுத்த புகார்தான் முதிலில் கொடுத்தது என்றால்?

ப: சரிதான்.

கே: ஒரு காவல் நிலையத்தில் முதலில் பெறப்பட்ட புகாருக்கு முதல் தகவல் அறிக்கை பதிவார்களா அல்லது இரண்டாவதாக பெறப்படும் புகாருக்கு முதல் தகவல் அறிக்கை பதிவார்களா என்றால்?

ப: முதல் புகாருக்கு தான் பதிய வேண்டும்.

கே: எ.த.சா.ஆ.5 ல் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தின் முத்திரை ஏதேனும் உள்ளதா என்றும் அல்லது ஆம்பூர் நகர காவல் நிலைய முத்திரை ஏதேனும் உள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: நீங்கள் எத்தனை மணிக்க ஆம்பூர் காவல் நிலையத்திலிருந்து புகாரை அனுப்பினேன் என்ற தகவல் எ.த.சா.ஆ.5 ல் உள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: அவ்வாறு அந்த புகாரை பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் எத்தனை மணிக்கு பெற்றார்கள் என்ற தகவல் உள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: அந்த புகாரை என்றைக்கு அனுப்பினேன் என்றால்?

ப: மறுநாள் 27.06.2015 அன்று அனுப்பினேன்.

கே: அலி அக்பர் ஒரு புகார் கொடுத்துள்ளார் என்று பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு தொலைப்பேசி மூலம் தகவல் சொன்னேனா என்றால்?

ப: சொன்னேன்.

கே: 27.06.2015 அன்று இரவு 09.00 மணிக்கு நான் பெற்ற புகார் எங்கே என்றால்?

ப: அதையும் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு தபால் மூலம் அனுப்பி வைத்துவிட்டேன்.

கே: அந்த புகாரை பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு அனுப்பியதற்கான ஒப்புகை சீட்டு உள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: 27.06.2015 அன்று புகாரை வாங்கியதாக கூறுகீறீர்கள் 26.06.2015 புகாரை வாங்கியதாக கூறுகிறீர்கள் அந்த இரண்டுக்கும் பொது நாட்குறிப்பில் பதிவு இருக்கிறதா என்றால்?

ப: இல்லை.

கே: தபாலை அனுப்புவதற்கு உள்ள பதிவேட்டை சிபிசிஐடி போலீசாரிடம் கொடுத்தேனா என்றால்?

ப: இல்லை.

கே: அந்த புகார்கள் எல்லாம் குற்ற எண் 158/2015 பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் பதிவு செய்வதற்கு முன்னால் பெற்று அவற்றின் மீது நடவடிக்கை எடுக்காமல் வேண்டுமென்றே மறைப்பதற்கு நான் உறுதுணையாக இருக்கிறேன் என்றால்?

ப: சரியல்ல.

கே: சட்டப்படி நடைமுறைப்படுத்த வேண்டிய செயல்களை செய்யாமல் எதிரிகளின் மீது தவறான ஒரு வழக்கை பதிவு செய்வதற்கு தாங்கள் உறுதுணையாக இருந்திருக்கிறேன் என்றால்?

ப: சரியல்ல.

கே: தாங்களால் சொல்லப்படும் 26.06.2015 அன்று அலி அக்பரால் தரப்பட்டதாக சொல்லப்படும் புகாரில் இந்த வழக்கின் எதிரிகளின் பெயர்கள் உள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: ஆம்பூர் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலம் எங்கள் ஆம்பூர் நகர காவல் நிலையத்திற்குள்ளே இருக்கிறதா என்றால்?

ப: இல்லை. அது தனியாக இருக்கிறது.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 158/2015 என்பது தொடர்புடையதாக சொல்லப்படும் புகார் யாருக்கு முகவரியிடப்பட்டிருக்கிறது என்றால்?

ப: காவல் துணைக் கண்காணிப்பாளர், ஆம்பூர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

கே: அந்த புகாரில் ஆம்பூர் டிஎஸ்பி அலுவலக முத்திரை ஏதேனும் உள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: அந்த புகார் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு பார்வேர்டு செய்யப்பட்டதாக அதில் உள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: டிஎஸ்பி க்கு அனுப்பபட்ட புகாரில் புகார்தாரர் தேதி குறிப்பிட்டள்ளாரா என்றால்?

ப: இல்லை.

கே: எதிரிகளின் மீது பொய்யான வழக்கு போட வேண்டும் என்ற உள் நோக்கத்தோடு 26.06.2015 அன்று தரப்பட்டதாக சொல்லப்படும் புகார்களை மறைப்பதற்காகவும் அதன் பின்னிட்டு

தேதியிடப்படாத ஒரு புகாரினை பெற்றதாக அ.த.சா.ஆ.1 நான் துணை புரிந்துள்ளேன் என்றால்?

ப: சரியல்ல.

கே: பள்ளிக்கொணடா காவல் நிலைய குற்ற எண் 158/2015 வழக்கானது முதன் முதலில் கோவிந்தசாமி என்ற ஆய்வாளரால் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது எனக்கு தெரியுமா என்றால்?

ப: தெரியும்.

கே: உண்மைகளை மறைத்து எதிரிகளின் மீது பொய்யான ஆவணங்களை தயார் செய்ய நான் துணை புரிந்துவிட்டு இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்?

ப: சரியல்ல.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5ம் மற்றும் 6ம் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். அனுமதியுடன் தொடர் குறுக்கு விசாரணை.

**மறுவிசாரணை– இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 04.34 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.02.28 17:29:17 +0530